1980 ஜூலை 8] [டாக்டர் எச். வி. ஹண்டே]

இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அதிலே உரிமை மீறல் உள்ளதா இல்லையா என்பதைப் பரிசீலித்த பிறகுதான் அதை அனுமதிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

(ஈ) நடவடிக்கை சுருக்க வெளியீடு.

திரு. ரா. உமாநாத் : நேற்று சம்மரி ஆப் ப்ரொசீடிங்சைப் பார்த்ததில் நேற்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றி மாறான பொருள் படக்கூடிய ஒரு வாசகம் அதிலே இருக்கிறது. பிரிவிலேஜ் மோஷனை மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் கொடுத்தது தெரியும். பத்திரிகையிலிருந்து எக்ஸ்பிளனேஷன் கிடைத்த பிறகு அது எடுத்துக் கொள்ளப்படும் என்று தாங்கள் சொன்னீர்கள். ஆனால் சம்மரி ஆப் ப்ரொசீடிங்சில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்குப் பதிலாக தீர்ப்பு கூறப்படும் என்று இருக்கிறது அதைத் திருத்த வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லுவதே இன்ப்ரக்சுவஸ் ஆகும். பதில் எப்போது பத்திரிகையிடமிருந்து வரும் என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொள்ளப்படும் என்றால் விவாதிக்கப்படும் என்றுதான் பொருள். அது பற்றிப் பேராசிரியர் பெரிய விளக்கமெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

(உ) உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது பற்றிய நடைமுறை.

டாக்டர் மு. கருணாநிதி: திரு உமாநாத் எழுப்பிய பிரச்சினை தொடர்பாக நானும் தங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். உரிமைப் பிரச்சினை அளிக்கப்படுகிற நேரத்தில் தாங்கள் அனுமதிப்பீர்களானால் என்ன உரிமைப் பிரச்சினை என்பதைப் படிக்கச் சொல்லி, பேசச் சொல்லி அதற்குப் பிறகுதான் சம்பந்தப்பட்டவர்களிடத்தில் தாங்கள் விளக்கம் கேட்டு தீர்ப்பு வழங்க வேண்டும். அதுதான் இந்த அவையின் மரபாக ஏற்கனவே இருந்து வந்திருக்கிறது. தீர்ப்பு பிறகு வழங்கப்படும் என்று சபாநாயகர் சொல்லிவிட்டு இரண்டு நாட்கள், நான்கு நாட்கள் கழித்து சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து, கடிதம் எழுதி அவர்களிடம் சமாதானம் பெற்ற பிறகு, இதோடு விட்டு விடலாம் அல்லது உரிமைக் குழுவுக்கு அனுப்பலாம் என்று சபாநாயகர் தீர்ப்புக் கூற வேண்டும். சபாநாயகர் அவர்கள் அதற்கு முற்றிலும் மாறாக உரிமைப் பிரச்சினை எழுப்பியவுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி

அவர்களிடத்தில் விளக்கத்தைக் கேட்டு இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து விவாதிப்பது என்பது முறையாகப் படவில்லை. அதைக் கொஞ்சம் தாங்கள் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்களோ அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. விளக்கம் வந்தபிறகு இப்பிரச்சினை பற்றி இங்கே விவாதித்து முடிவு எடுக்கப்படும். அதுபற்றி விளக்கம் கேட்காமல் எப்படி விவாதிப்பது?

(முற்பகல் 9·50).

டாக்டர் மு. கருணாநிதி : மன்னிக்கவேண்டும். நான் அங்கே தான் வேறுபடுகிறேன். நான் தங்களிடத்திலே கூறிக்கொள்வதெல்லாம், விளக்கம் கேட்டபிறகு தான் உரிமைப் பிரச்சினையை அவையிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது சரியல்ல. அது தான் என்னுடைய வாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?

டாக்டர் மு. கருணாநிதி : நான் நினைக்கவில்லை. இருப்பதைச் சொல்கிறேன். உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தவுடன், அதை சபையிலே எழுப்புவதற்குத் தாங்கள் அனுமதி அளித்தால், அந்த உரிமைப் பிரச்சினையைப் படித்துவிட்டு, உறுப்பினர்கள் அதன்மீது விளக்கங்களைச் செல்வதற்கு உரிமையுண்டு. அதற்குப் பிறகு சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து விட்டு பிறகு தீர்ப்பு வழங்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே விவாதித்த பிறகு அவர்களிடம் கேட்பானேன்?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பிரைமா பேஸி இருக்கிறதா இல்லையா என்று விளக்கம் சொல்லவேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எப்படி?

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே பாராளுமன்றம் மாதிரி இல்லாமல் என்டையர்லி டிபரன்ட் புரசீஜர் இத்தனை வருடங்களாகக் கையாளப்பட்டு வருகிறது. விளக்கம் கேட்ட பிறகு இங்கே விவாதம் நடத்தி அதற்குப் பிறகு தீர்ப்புக் கூறுவது ஒன்று. இன்னின்னார் இன்ன சப்ஜெக்ட் சம்பந்தமாக பிரிவிலேஜ் மேட்டர் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று அவையிலே சொல்லி, பிறகு அதிலே பிரைமா பேஸி

1980 ஜூலை 8] [திரு. ரா. உமாநாத்]

கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதுபற்றி உறுப்பினர் சுருக்கமாக விளக்கம் தரவேண்டுமென்று தாங்கள் கூறுவீர்கள். அப்படிச் செய்தால்தான் அந்த விஷயம் ஹவுஸிலே வரும். அதனால் பிரிவிலேஜ் மேட்டருக்கு மற்ற எல்லா அயிட்டங்களுக்கும் மேலாக முதலிடம் கொடுக்கப்படுகிறது. பிரைமாபேஸி கேஸ் அதிலே இருக்கிறதா இல்லையா என்று உறுப்பினரை நீங்கள் கேட்டு பிறகு சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்டு என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன் என்று நீங்கள் சொல்லுவீர்கள். இந்த முறைதான் வருடக்கணக்காக இந்த அவையிலே நடந்து வருகிறது. அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். உரிமைப் பிரச்சினை வந்தவுடன் அவர்களிடம் விளக்கம் கேட்ட பிறகு இங்கே விவாதம் நடக்கும் என்று நீங்கள் சொல்லுவதால் உங்களுக்குத்தான் பர்தர் காம்பிளிகேஷன்ஸ் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த காம்பிளிகேஷன்ஸை தாங்கலாம், அதிலே ஒன்றும் இல்லை. இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லா வகைகளிலும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் வெளியிலே இருக்கிறவர்களைப் பற்றிய பிரச்சினை வருகிறபோது அவர்களைக் கேட்கவேண்டும் என்பதுதான் நியாயம். இரண்டு பக்கமும் கேட்டபிறகு முடிவு எடுக்கலாம். உறுப்பினர்களுக்கு இருக்கிற உரிமை அவர்களுக்குக் கிடையாது. அதுதான் புரசீஜராக இருக்கவேண்டும். நான் அதிகாரிகளைக் கலந்தேன். ஆனால் பழைய முறையே இருக்க வேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்கள். பழைய முறையே இருப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

திரு. அ. ரகுமான்கான் : நான் இதை வாசித்துவிடட்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீர் திடீரென்று எதையும் வாசித்துவிடக் கூடாது. வாசிக்கவேண்டிய நேரம் வருகிறபோதுதான் வாசிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, பத்திரிகைகள்மீது உரிமைப் பிரச்சினை வருகிறபோது முதலிலே தங்கள் அறையிலே வந்து சந்தித்து......

திரு. துரை முருகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஸ்பீக்கர் ரூலிங் கொடுத்தபிறகு அந்தப் பிரச்சினையைப்பற்றி கிளப்பலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், அடுத்து திரு. இரா. இராசமாணிக்கம்.